2016 பிப்ரவரி 20]

இடித்துவிட்டு, புதிய ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது தொடர்பாக, அக்கட்டடத்தில் உள்ள இதர துறை அலுவலகங்களின் மாவட்ட அளவிலான துறை அலுவலகங்களின் கருத்து கோரப்பட்டுள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 140 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடம் என்பதால் அதனை இடிப்பது தொடர்பாக, தொல்பொருள் துறையின் தடையில்லாச் சான்று கோரப்பட்டுள்ளது. அது வரப்பெற்ற பின்னர், மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***36192—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகமலை ஒன்றியம், ஆர்.டி. மலையில் தனியாக பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகமலை ஒன்றியம், ஆர்.டி. மலை அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்கிட அரசாணை எண் 66, பள்ளிக் கல்வித் துறை, நாள் 21–5–2014–ல் ஆணை வெளியிடப்பட்டு,

இப்பள்ளி 1–9–2014 முதல் மகளிர் உயர்நிலைப் பள்ளியாகத் தற்போது தனியாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆராதனைக்குரிய அன்பு தெய்வம் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தக் கேள்வியை நான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்டிருந்தேன். இந்தக் கேள்விக்கான பதில் பெறுவதற்கு முன்பே, ஆணையிட்டு இந்தப் பள்ளியைத் துவங்கியதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே ஒன்றியத்திலே தோகமலை என்ற ஊரிலே 1700 மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரிக்க முடியுமா என்பதைக் கேட்க விழைகிறேன். அதற்குப் பணமும் கட்டியிருக்கிறார்கள். இடமும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகமலை ஒன்றியத்திலே தோகமலை பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்காக மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்*

2016 பிப்ரவரி 20]

என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

போக்குவரத்துப் பணிமனை

***53910—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடையில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்குளம் மற்றும் சிப்காட் புதூர் பகுதிகளில் பணிமனைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்தக்கடை பகுதியில் புதிய பணிமனை கேட்டிருக்கிறார்கள். போதிய பயணிகள் அடர்வு இல்லாத காரணத்தினால், ஒத்தக்கடை பகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளின் விடிவெள்ளி, ஒட்டு மொத்த தமிழினத்தின் பாதுகாவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில், கிழக்கு தொகுதியில் மட்டும்தான் பணிமனை கிடையாது. மீதி 5 தொகுதிகளிலும் பணிமனை இருக்கின்றது. எனவே, மதுரை மாவட்டம், கிழக்கு*